DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **O.S :55/2022** | |
| Deposition of Witness | | | : | **வா.சா. 6** | |
| Name | : | **திருமதி. ருக்மணி** | Occupation | : | **வீட்டுக்குடித்தனம்** |
| Father's Name/ Husband | : | **பரமசிவம்** | | | |
| Village | : | **சென்னை** | Age | : | **60** |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 03-03-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.42**

**முதல் விசாரணை**

இந்த வழக்கில் நான் மூன்றாம் பிரதிவாதி. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்திருக்கிறேன். தவாவை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**1,2, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கும் என்னுடைய சகோதரர் மற்றும் சகோதரர்ளுடைய வாரிசுகளுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ 1 என்றால் சரி. இந்த பாகப்பிரிவினை பத்திரத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் எனக்கு குறைவான இடம் கொடுத்திருப்பதாகவும் எனக்கு அதில் ஆட்சேபனை இருப்பதாக வாதி சொல்லியிருப்பது தவறு எனக்கு ஆட்சேபனை இல்லை.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.44**